செ.வெ. எண்: 460 நாள்: 18.7.2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (18.7.2011) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாவட்டம், அவினாசி அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு, மின்னாக்கி அறை ஆகியவற்றிற்கான புதிய கட்டடங்களைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

அவினாசி அரசு மருத்துவமனை 42 படுக்கை வசதி கொண்டது. அம்மருத்துவமனையில் தினசரி சுமார் 500 புறநோயாளிகளும், 40 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு ஸ்கேன் வசதி, குடும்ப நலம், கண் சிகிச்சை, பல் சிகிச்சை, இயன் முறை சிகிச்சை, காசநோய் மற்றும் எச்.ஐ.வி. சிகிச்சைக்கான பிரிவுகள் செயல்பட்டுவருகின்றன. மேலும், அவினாசி அரசு மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலை 47–ல் அமைந்துள்ளதால், ஈரோடு, கோவை, திருப்பூர் ஆகிய பகுதிகளில் ஏற்படும் சாலை விபத்துக்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க ஏதுவாக உள்ளது.

அவினாசி அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் தேசிய ஊரக சுகாதார திட்டத்தின் கீழ் 70 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், 334 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. புற நோயாளிகளுக்கு கூடுதல் இட வசதி அளிக்கவும் அதன் மூலம் தரமான சிகிச்சை வழங்கவும் இக்கட்டடங்கள் பெரிதும் உதவும்.

ஏழை, எளிய, நலிந்த மக்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சைகள் எளிதில் கிடைக்கும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாவட்டம், அவினாசி அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு, மின்னாக்கி அறை ஆகியவற்றிற்கான புதிய கட்டடங்களைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

அவினாசி மருத்துவமனையில் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ள வந்திருந்த திருமதி. உஷா என்ற பெண் கூறுகையில், இதற்கு முன்பு இந்த மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் இல்லாமல் மரத்தடியிலும், மருத்துவமனை வளாகத்திலும் இருந்து சிகிச்சை பெற வேண்டியிருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் புதிய கட்டடம் கட்டிக் கொடுத்து அனைத்து மருத்துவ வசதிகளையும் உள்ளேயே செய்து கொடுத்ததற்கு மகிழ்ச்சி தெரிவிப்பதோடு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது:- “அனைவருக்கும் வணக்கம். அவினாசியில் புறநோயாளிகளுக்கான கட்டடத்தை இன்று திறந்து வைத்ததில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நோயாளிகள், பொதுமக்கள் இந்த கட்டடத்தை, இங்குள்ள வசதிகளை, நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு அதனால் பலனடைவார்கள் என்ற நம்பிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.”

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் மற்றும் அத்துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**
**நாள் : 18.7.2011**